NEW SCIENCE ACADEMY
யாழ்ப்பாணம்
"மின்னியல்"
By
Mr. மணியம்
சனி, ஞாயிறு 2-30 — 3-30
ஆரம்பம்
16-08-86

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ.1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

NEW SCIENCE ACADEMY
(B. M. C.க்கு முன்)
யாழ்ப்பாணம்
87 A/L
தாவரவியல்
அலகு 8
(இயங்கும் தாவரம்)
PHYSIOLOGY
சனி, ஞாயிறு 10-30—11-30

கடிதம்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடி மீ 29 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்ஹஜ் பிறை 7 (14-08-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 230

முஸ்லிம் பிரமுகர் கூட்டணி நாளை முக்கிய சந்திப்பு

தமிழ் மொழி பிராந்தியம் குறித்து விரிவாக ஆராய்வர்

கொழும்பு, ஆகஸ்ட் 14

கிழக்கு இலங்கை முஸ்லிம் பிரமுகர்கள் தாதுக்குழுவினதும் கூட்டணித் தலைவர் களினதும் முக்கியமான சந்திப்பு ஒன்று நாளை இடம்பெற உள்ளது தமிழ் மொழி பிராந்தியம் ஒன்றை உருவாக்குவது சம்பந்தமாகவே கூட்டணி — முஸ்லிம் தலைவர்கள் சந்திப்பு அமையும்.

கூட்டணித் தலைவர்கள் சென்ற தடவை கொழும்பு வந்த சமயம் கிழக்கு மாகாணத்தை முஸ்லிம் பிரமுகர்களுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

அப்போது கிழக்கில் உள்ள தமிழ்ப் பேசும் குடிகளை வடமாகாணத்துடன் இணைத்து தமிழ் மொழிப் பிராந்தியம் ஒன்றை அமைப்பது பற்றிப் பேசப்பட்டது.

அப்படி ஒரு பிராந்தியம் அமைக்கப்படுமானால் அதன் முதலமைச்சர் தமிழராக இருந்தால் உப முதலமைச்சர் பதவி முஸ்லிம்களுக்கு வழங்கப்படும் என்றும் —

சில சமயம் முஸ்லிம் ஒருவரும் முதலமைச்சராகப் பணிபுரிவர் வாய்ப்பு அளிக்கப்படும் என்றும் சந்திப்பில் கலந்து கொண்ட முஸ்லிம் பிரமுகர்களிடம் கூறப்பட்டது.

தமிழ் மொழிப் பிராந்தியத்தில் தமிழர் அனுபவிக்கட்டும் சகல உரிமைகளும் முஸ்லிம்களுக்கும் கிடைக்கக்கூடியதாக பார்த்துக்கொள்ளப்படும் என்ற கருத்தாகவும் ஒன்றை அமைப்பது பற்றிப் பேசப்பட்டது.

அப்படி ஒரு பிராந்தியம் அமைக்கப்படுமானால் அதன் முதலமைச்சர் தமிழராக இருந்தால் உப முதலமைச்சர் பதவி முஸ்லிம்களுக்கு வழங்கப்படும் என்றும் —

சில சமயம் முஸ்லிம் ஒருவரும் முதலமைச்சராகப் பணிபுரிவர் வாய்ப்பு அளிக்கப்படும் என்றும் சந்திப்பில் கலந்து கொண்ட முஸ்லிம் பிரமுகர்களிடம் கூறப்பட்டது.

தமிழ் மொழிப் பிராந்தியத்தில் தமிழர் அனுபவிக்கட்டும் சகல உரிமைகளும் முஸ்லிம்களுக்கும் கிடைக்கக்கூடியதாக பார்த்துக்கொள்ளப்படும் என்ற கருத்தாகவும்

அப்போது வழங்கப்பட்டதாம்

இந்த அடிப்படையில் வெகுவிரைவில் கிழமை நடைபெறப்போகும் கூட்டணித் தலைவர்கள் முஸ்லிம் தலைவர்கள் சந்திப்பு முக்கியம் வாய்ந்த ஒன்றாக அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகின்றது

இதன் காரணமாகத்தான் கிழக்கு இலங்கை முஸ்லிம் பிரமுகர்களு (4-ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

14—08—1986
வியாழக்கிழமை
சுபநேரம்:-
7.35 முதல் 9.05 வரை
ராகுகாலம்:-
1 35 முதல் 3 05 வரை
இன்று பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
நவமி பி. ப. 2 20 வரை

மகனைப்பார்க்க சென்ற தாயும் பூஸாவில் தடுத்து வைப்பு!

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 14

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மகனைப் பார்க்கச் சென்றிருந்த தாயாரும் பாதுகாப்பு அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டார். வவுனியாவைச் சேர்ந்த 48 வயதான திருமதி ப. விசாலாட்சிக்கே இந்தக் கதி ஏற்பட்டது

வவுனியா அரச அதிபரின் கடிதத்துடன் திருமதி விசாலாட்சி பூஸா சென்றார். பூஸா முகாமுக்குச் சென்றபோது இவர் கொண்டு போனதெல்லாம், மற்றும் தன்தாலேஜுஸ் ஐப் பார்வையிட்ட அதிகாரிகள் அந்தத் தாலேஜுகளில் தவறு இருப்பதாகக் கூறினராம்.

பின்னர் திருமதி விசாலாட்சியை ஜீப் ஒன்றில் ஏற்றிக் கொண்டு சென்றனராம். அதன் பின்னர் அவர் பாதுகாப்பு அதிகாரிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வந்தது

விசாலாட்சியுடன் கூடச் சென்ற திரு. ஏ. அரியரத்தினம் தம்பதிகள் வவுனியாவுக்குத் திரும்பி வந்து மாவட்ட பிரசைகள் குழுச் செயலாளர் டாக்டர் எஸ். வி. பரராஜசிங்கத்துக்கு முறையிட்டனர்

டாக்டர் பரராஜசிங்கம் இது சம்பந்தமா இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எம். ஏ. செல்வசாமியுடன் தொடர்பு கொண்டார் (உ-எ)

நீதிமன்றத்தில் நிறுத்தத் தவறின் சிறையிலிருந்து போராடுவோம்

வெலிக்கடை தமிழ்க் கைதிகள் அதிகாரிகளிடம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 14

தங்களை விரைவில் நீதிமன்றத்தில் நிறுத்தத் தவறும் பட்சத்தில் தாம் சிறையில் இருந்தவாறே போராட்டம் நடத்தப்போவதாக வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க்கைதிகள் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள்

நேற்று வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்ற அரச உயர் அதிகாரிகளிடமே தமிழ்க் கைதிகள் ஒரேகுரலில் இப்படித் தெரிவித்தனர் என்று அறியவந்தது

இந்தச் சிறைக்கூண்டிலிருந்தான் எமது சகோதரர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் —

அதே சிறைக்கூண்டில் பாதுகாப்பற்ற முறையில் வருடக்கணக்காக நாம் அடைக்கப்பட்டிருக்கிறோம் —

எம்மை நீதிமன்றத்தில் விரைவில் ஆஜர் செய்வதாக அரசு அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை —

ஆகவே நாம் சிறைக்குள் இருந்தவாறே போராட்டம் நடத்தப் போகிறோம்.

—இப்படித் தமிழ்இளைஞர்கள் தெரிவித்தனர் என்று அறியவந்தது

சிறைச்சாலை விதிகளை மீறுவதன்மூலம் உரிமைகோரிக்கைகளை வென்றெடுக்க முடியாது. அவற்றை அது பின்தள்ளுவதாகவே முடியும் — என்று அரச அதிகாரிகள் தெரிவித்தனராம்.

'உங்கள் கோரிக்கைகளை அரசின் கவனத்துக்கு கொண்டுவருவோம்' என தமிழ் இளைஞர்களிடம் அவர்கள் இறுதியில் உறுதியளித்தாகவும் தெரியவந்தது.

கூட்டணியுடன் உடன்பாடு காணும் கட்டம் வந்துவிட்டது

அமைச்சர் அல்விஸ் தகவல்

கொழும்பு, ஆகஸ்ட் 14

கூட்டணியுடன் உடன்பாடு காணும் கட்டத்திற்கு அரசு வந்துள்ளது.

அமைச்சரவைக் கூட்டமுடிவில் ரஞ்ஜன் அமைச்சர் ஆனந்த நிஸ்லடி அல்விஸ் செய்தியாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அமைச்சர் ஆனந்த நிஸ்லடி அல்விஸ் மேலும் சொன்னதாவது:

முதற்கட்டப் பேச்சுக்களிலேயே பெரும்பாலான சரத்து வேறுபாடுகள் நீக்கப்பட்டு விட்டன

தமிழருக்குச் சொந்த மாகாணசபை ஒதுக்கியிருக்கிறோம்; சொந்த பொலீஸ் படை வைத்திருக்க அனுமதிக்கிறோம்

சொந்தப் பிரதேசங்களை அவர்களே நிர்வகிக்க வழி செய்துள்ளோம்.

இவற்றைவிட அவர்களுக்கு என்ன இனி வேண்டும்?

கேள்வி: பாரம்பரிய தமிழர் தாயகம் பற்றிய தீர்வு காணப்பட்டு விட்டதா?

அமைச்சர்: அப்படியான தாயகம் என்று ஒன்று இங்கே செயற்பாட்டளவில் அது குறித்தும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

கேள்வி: அப்படியானால் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள்..

அமைச்சர்: இரண்டாம் சுற்றுப் பேச்சுவரும் இருக்கும் ஒரு சுற்றுப் பேச்சுக்களில் போதுமுக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுவிட்டன.

மிதவாதத் தமிழ்த் தலைவர்களுடன் ஒரு உடன்பாடு எட்டும் கட்டத்துக்கு பேச்சுக்கள் வந்துவிட்டன.

கேள்வி: போராளிகளுடன் அரசு பேசுமா?

அமைச்சர்: ஆயுதங்களைக் கீழேபோட்டுப் பேச்சுவார்த்தை நடத்த பேசைக்கு வந்தால் போராளிகளுடனும் அரசு பேசத் தயாராகவே இருக்கிறது. (அ-எ)

பெற்றோலுடன் பவுஸர் கடத்தல்

மட்டக்களப்பு, ஆக 14

மட்டக்களப்பு எரிபொருட் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பவுஸர் ஒன்று 1, 100 லிட்டர் பெற்றோலுடன் நேற்றுப் பிற்பகல் 1. 30 மணியளவில் இனந்தெரியாத இளைஞர்களினால் கடத்தப்பட்டது.

(இ-எ-21)

படகில் மீட்கப்பட்டவர்களை அகதிகளாக ஏற்பதற்கு கனடா தயாராம்!

ஒட்டாவா, ஆக 13

உண்மையான அகதிகளாக இருப்பின், படகுகள் மூலம் கனடா வந்தடைந்த 152 இலங்கைத் தமிழரையும் கனடா அரசு ஏற்க இருப்பதாகத் தெரிவருகிறது.

இப்படி கனடா குடியுரிமை, குடிவரவு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் அகதிகாரத்திக் கடலில் இந்த அகதிகளை இறக்கி விட்டுச் சென்ற கப்பலைத் தேடும் பணியில் கனடா விமானப் படையினர்

நேற்று முழுவதும் தேடுதல் நடத்தினர்கள்

5 பெண்கள், 4 குழந்தைகள் உட்பட 152 இலங்கைத் தமிழ் அகதிகள் நற்போது கனடாவில் சென்ஜோன்ஸ் நகரில் ஒதுக்கிடத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையில் "குமுறிய அரசியல் நிலைகு (4-ஆம் பக்கம் பார்க்க)

கோட்டையிலிருந்து சூடு:

நீர் விநியோகப் பகுதி ஊழியர் தப்பினர்!

யாழ்ப்பாணம், ஆக 14

யாழ் ஆஸ்பத்திரி நீர் விநியோகப் பகுதி ஊழியர்கள் நேற்றுக் கோட்டையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பினர்

பண்ணைத் தொடர்பு நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள கழிவுநீர் அகற்றும் இயந்திரத்தை இயக்கச்சென்ற போதே இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது

யாழ். ஆஸ்பத்திரியில் (4-ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி

யாழ். பல்கலைக்கழக மாணவரின் கோரிக்கைகளை ஆராய்ந்து தீர்வுகாண நிர்வாகம் அக்கறை

பதில் துணைவேந்தர் அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக 14

யாழ் பல்கலைக்கழக மாணவரின் கோரிக்கையின் ஆராய்ந்து தீர்வு காணுவதில் பல்கலைக்கழக நிர்வாகம் அக்கறை கொண்டிருக்கிறது

பதில் துணைவேந்தர் திரு நா பாலசுந்தரம் விடுத்த அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவித்திருக்கிறார்

பல்கலைக்கழகத்தில் இன்றைய நிலைமை தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் நன்கு உணர்ந்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர் குழுவினர் 12-8-86 இல் எம்மிடம் கையளித்த கோரிக்கைகளை ஆராய்ந்து தீர்வு காண்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் மிக அக்கறை கொண்டுள்ளது

இதனைச் செயற்படுத்து (4-ஆம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழகத்தில் ஒரு நாள் உண்ணாவிரதம்

மாணவர் இன்று நடத்துவர்

யாழ்ப்பாணம், ஆக 14

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருப்பர்.

ராகிங் பிரச்சினை தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்று தெரிவித்து அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் விதத்தில் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை மாணவர்கள் நடத்துவர்.

இவ்வாறு நேற்றுநடைபெற்ற மாணவர்களின் பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

மாணவர்களின் அமைப்புக் குழு இக்கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது.

இந்தக் குழுவால் நிர்வாகத்தின் முன் வைத்திருக்கும் கோரிக்கைகள் தொடர்பாக மாணவர்களின் அபிப்பிராயத்தை அறிவதற்கே இக்கூட்டம் கூடியப்பட்டது.

இக் கூட்டம் முடிவில் இன்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவே தென்றும் —

பல்கலைக்கழக நிர்வாகம் கோரிக்கைகளை அமுல் நடத்தும் வரை போராடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (உ-5)

சிங்களவர் காணியில் அறுவடைசெய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட தமிழர்!

கல்முனை, ஆக 14

கல்முனையில் ராணமடு என்னும் இடத்தில் இடம் பெற்றது

அங்கு '20 விட்டுத் திட்டம்' என்ற பகுதியில் வசிக்கும் தமிழ்க் குடியானவர்களே இந்த (4-ஆம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழகத்தில் ஒரு நாள் உண்ணாவிரதம்

மாணவர் இன்று நடத்துவர்

யாழ்ப்பாணம், ஆக 14

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் இருப்பர்.

ராகிங் பிரச்சினை தொடர்பாக பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்று தெரிவித்து அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் விதத்தில் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை மாணவர்கள் நடத்துவர்.

இவ்வாறு நேற்றுநடைபெற்ற மாணவர்களின் பொதுக்கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

போராளிகள் தலைவர்கள் இந்திய அதிகாரிகளை

நாளை டில்லியில் சந்திப்பர்

சென்னை, ஆக. 14

ஐந்து தமிழ்ப்போராளி அமைப்புக்களின் தலைவர்கள் நாளை (வெள்ளிக்கிழமை) இந்திய அரசு அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்த புதுடில்லிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

வியாழன் மாலை போராளித் தலைவர்கள் புதுடில்லிக்கு விமானம் மூலம் செல்வர்.

புதுடில்லியில் இந்திய சுதந்திர தினமான நாளை இந்திய வெளியுறவு அமைச்சர் செயலாளர் திரு. ஏ வெங்கடேஸ்வரன், வெளியுறவு ஆலோசனைக் கமிட்டி தலைவர் திரு ஜி.பார்த்தசாரதி கூட்டப் உயர் இந்திய அரசு அதிகாரிகள், இலங்கை அமைச்சர்களுடன் தமிழ்ப் போராளித்தலைவர்களை பேச்சுக்கள் நடத்தவர்.

இப்படி புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-ஐ-எ)

3 தமிழரின் சடலங்கள் ஒன்றுகக் கட்டப்பட்ட நிலையில் கரை ஒதுங்கின

கல்முனை, ஆக 14

கல்முனையில் முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான அரிசி ஆலையில் வேலை பார்த்து வந்த 3 தமிழ்த் தொழிலாளரின் சடலங்கள் நேற்று மாலை பாண்டிருப்புக் கடற்கரையில் உள்ள இந்து மயானத்துக்கு அருகில் கரை ஒதுங்கின.

சடலங்கள் மூன்றும் ஒன்றுகக் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டன.

சந்தி வெளியில் இருந்து அரிசி ஆலைக்கு வேலைக்கு வந்து செல்பவர்களின் சடலங்களே இவை.

நேற்றுக்காலை கல்முனை நகரில் முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான பெற்றோல் நிலையம் ஒன்று தாக்கப்பட்டது குண்டு ஒன்றும் வெடித்தது.

பெற்றோல் குதங்களில் (4-ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையினரே! ஆர்வமுடன் படியுங்கள் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1,500 தமிழ் அகதிகள் மூதூரில் பரிதவிப்பு

திருகோணமலை, ஆக 14
மூதூர் அகதி முகாம்களில் தங்கியுள்ள சுமார் 1,500 தமிழ் அகதிகள் ஒருபுறம் ஆயுதபடையினரின் நாசகாரலுக்குப் பயந்தும் மறுபுறம் உணவுத் தட்டுப்பாட்டினால் உருவாகியுள்ள பசியினை எதிர்நோக்கியும் வாழவேண்டிய நெருக்கடிநிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

கட்டைபறிச்சான், பெருவெளி, மல்லிகைத்தீவு முகாம்களில் வாழும் சுமார் 300 குடும்பங்களைச் சேர்ந்த இவர்களே இந்த நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

ஜூலை, ஆகஸ்ட் ஆகிய இரு மாதங்களில் மட்டும் இதுவரை சுமார் 71 தமிழ் அகதிகள் ஆயுதபடையினரால் தப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்தனர்

(உ.எ-150)

இளைஞனை விடுவிக்கக் கோரி வீதித்தடை!

உடுவில், ஆக 14
சுன்னாகம் — கந்தரோடை வீதியில் போக்குவரத்து 5 மணி நேரம் தடுக்கப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி தெரிவிக்கப்படுவதாவது.

இரு இளைஞர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலை அடுத்து இளம் தொழிலாளி ஒருவரை விசாரணைக்கென அழைத்துச் சென்றது.

அந்த இளைஞனை விடுவிக்குமாறு கோரியே மக்கள் சுன்னாகம் கந்தரோடை வீதியைத் தடைசெய்து போக்குவரத்தினை விக்கிரமாதித்தடையச் செய்தனர்

இதனால் 768 இலக்க யாழ்ப்பாண அரச பஸ் சேவை பாதிக்கப்பட்டது.

சமூகநலன் விரும்பிகளும் விடுதலை இயக்கங்களும் ஒன்றிணைந்து பேச்சுவார்த்தை நடத்திய தனால் வீதித்தடை அந்த நிமிடம் இரவு அகற்றப்பட்டது;

விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட இளைஞரும் விடுதலை செய்யப்பட்டார்.

பின்னர் வழமைபோல் பஸ் மினிபஸ் சேவைகள் இந்த வீதியால் நடைபெற்றன. (இ-27)

சீனன்குடா பகுதியில் சர்வதேச விமான நிலையம்

கொழும்பு, ஆக. 14
சீனன்குடா விமானத் தளத்தைச் சுற்றியுள்ள காணிகளைச் சுவீகரித்து இரண்டாவது சர்வதேச விமான நிலையம் ஒன்றை நிறுவ அரசு உடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிய வருகின்றது.

சர்வதேச விமான நிலையம் நிறுவும் வேலைகள் உடனே ஆரம்பிக்கப்படாவிட்டாலும், காணிச் சுவீகரிப்பு வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்றும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-ஐ-எ)

வாகன அனுமதி பத்திரம் கிடையாது

யாழ்ப்பாணம், ஆக 14
நல்லூர் உற்சவ காலத்தில் தடை முகாம் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு இம்முறை வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரண திருவிழா நாட்களில் மாலை 7.15 மணிக்கும் விசேட திருவிழா காலத்தில் இரவு 8.15 க்கும் பின்னர் தடை முகாம் அகற்றப்படும்.

நல்லூர் 12 30 க்கும் 2 30 மணிக்கும் இடையில் தடைபோடப்பட்ட பகுதிக்குள் இருக்கும் வியாபார நிலையங்களுக்குரியோர்களை எடுத்துச் செல்லலாம் என்று அறிவிக்கப்பட்டது (இ.எ)

அறியாமையை அகற்றும் ஞானவடிவே அம்பாள் தியானித்தால் துன்பம் தீரும்

சாவகச்சேரி, ஆக. 14
வாழ்வுக்கு வழிகாட்டுவது வழிபாடு. உள்ளத்தை தூய்மையுடன் வைத்திருக்கவும் இறை வழிபாடு நமக்கு உதவுகிறது. சிறுவர் ஆற்றலது ஒளி அறியாமையை அகற்றுவது ஞானம். அந்த ஞானவடிவமாகவே அம்பாள் இருக்கின்றாள். அவளை தொடர்ந்து தியானித்தால் துன்பம் எல்லாம் அகலும்.

இவ்வாறு அருள்மொழி அரசியிலிருந்தவாள் திருமதி வசந்தா வைத்தியநாதன் சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூர விழாவில் உரையாற்றும் போது கூறினார்.

பிரதம சிவாச்சாரியர் பிரதிஷ்டாபூஷணம் சிவாகமஞானசாகரம் சிவஸ்ரீ சே. சோமசுந்தரக்குருக்கள் தலைமையில் இச் சொற்பொழிவு இடம் பெற்றது.

தேவஸ்தான அறங்காவலர் பிரம்மஸ்ரீ மானாவடி சர்மாவின் வரவேற்புரையைத் தொடர்ந்து திருமதி வசந்தா வைத்தியநாதன் சேவையின் திருவிளக்குப்பூசைநிறந்த பலனாக நாரவந்தது.

அதே அருளை நாம் அடைவதற்கு இப்பூசை ஆரம்பப்படியாகும்.

பூசையில் பங்குபற்றும் அத்தனை பெண்களும் அம்பாளின் அவதாரங்களாகவே காட்சி தருகிறார்கள்.

ஆண்டுதோறும் இப் பூசை நடைபெறுவது பாராட்டிற்குரியது.

துய்மையில் எடுத்துக் காட்டாக தீபம் ஏற்பட வேண்டும் என்றார்.

(இ-31)

பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் குஹசொரூபன்
செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஜெகதீசன்-சரோசா தம்பதியினரின் ஏகபுதல்வன் குஹசொரூபன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (14-8-86) குஹவாசம் இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பாச்சி, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமா, மாமி, அண்ணன்மார், அக்காமார், மச்சான், மச்சாள் முருகன் அருளால் சகல செல்வங்களும் பெற்று நீடு வாழ்க என வாழ்த்துகின்றோர்கள்.

பேராதனைப் பல்கலைக்கழக
வெளிவாரிப் பரீட்சை

G.A.Q. 1987 ஏப்ரல்
B.A. 1986 டிசம்பர்

மீட்டல்—வினா விடை வகுப்பு

பொருளியல்
S. வரதராஜன்

ஆரம்பம்: 16-08-86 சனி 2-00 p.m

பொருளியல் கல்வி நிலையம்
200, பிரதான வீதி, கண்டுக்குளி.
(சென் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

மக்கள் முகம்

யாழ் கிராம சேவையாளர் சங்கம்

யாழ்ப்பாணம், ஆக 14
யாழ் மாவட்ட கிராம சேவையாளர் சங்கத்தின் 23 ஆவது ஆண்டு விழா நற்பொழுதுக்கூட்டம் யாழ்ப்பாணம் புனித பரியோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

நடப்பாண்டு நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வே. மாரிக்கண்டு, துணைத் தலைவர் (1) திரு எஸ். நடராசா, துணைத்தலைவர் (2) திரு மு தர்மதாசன், கௌரவ பொதுச் செயலாளர் செ. மனோகரன், கௌரவ உதவிச் செயலாளர்; (1) ஏ ஞானச் சந்திரன், கௌரவ உதவிச் செயலாளர் (2) ஆர் சந்திரகுமார், கௌரவ பொருளாளர் எஸ் ஜே. செல்வத்துரை, உள்ளக கணக்காய்வாளர் ஏ ரி அருணாசலம்,

ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கும் தலா ஒரு பிரதிநிதியாக 13 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர் (இ)

வடக்கில் 8,800 ஹெக்டரில் உப உணவுப் பயிர்ச் செய்கை

யாழ்ப்பாணம், ஆக. 14
யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டு 8 ஆயிரத்து 800 ஹெக்டரில் உப உணவுப் பயிர்கள் செய்கை பண்ணுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கிறது.

1986-87 ஆம் ஆண்டுக்கான விவசாய அபிவிருத்தி மாகாணநாட்டு இந்தமுடிவு தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாடு அரச அதிபர் தலைமையில் யாழ் செயலகத்தில் நடைபெற்றது

யாழ் மாவட்டத்தில் இவ்வாண்டு 4,790 ஹெக்டரில் மிளகாயும் 2,796 ஹெக்டரில் வெங்காயமும், 770 ஹெக்டரில் பாசிப்பயறும். 114 ஹெக்டரில் உழுந்தும், 80 ஹெக்டரில் நிலக்கடலையும் 250 ஹெக்டரில் உருளைக் கிழங்கும் செய்கை பண்ண திட்டமிடப்பட்டிருக்கிறது.

இவற்றுடன் எள்ளு, சூரியகாந்தி, தட்டாப்பயறு சோயா என்பனவற்றையும் பெருமளவில் பயிரிட ஊக்குவிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. (உ-5)

ஆசிரியர் இடமாற்றம்; விண்ணப்பம் கோரப்படுகின்றது

யாழ்ப்பாணம், ஆக 14
அடுத்த ஆண்டில் மாவட்டங்களுக்கிடையே இடமாற்றம் பெற விருப்புள்ள அரச பாடசாலை ஆசிரியர்களின் இடம் மாற்றத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களாவும் தற்போதே பணிபுரியும் பாடசாலை அதிபரினூடாக அல்லப்பகுதி கல்விப் பணிப்பாளருக்கு செப்பமிடுவர். மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று வடமாநில கல்வித்திணைக்களத்தைச் சேர்ந்த பிரதம கல்வியதிகாரி கு சோமசுந்தரம் தெரிவித்தார்.

தற்போது இதற்காகப் பாவிக்கப்பட்டுவரும் விண்ணப்பப் படிவங்களை இருபிரதிகள் இதற்காக அனுப்பப்பட வேண்டும்.

கீழ் குறிப்பிடப்படும் வகுதிகளைச்சேர்ந்த ஆசிரியர்கள் இத்தகைய இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க தகுதிபெற்றவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

1. மாவட்ட சேவை அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள்.

அ. பேரேட்டிப் பரீட்சை மூலம் 1981 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் நியமிக்கப்பட்ட - தரா தரப் பத்திரமுள்ள, பத்திரமற்ற ஆசிரியர்கள்.

ஆ 1982 ஆம் ஆண்டிலும் அதற்கு பின்னரும் நியமிக்கப்பட்ட "டிப்ளோமா" தகுதி பெற்ற ஆசிரியர்கள்

இ 1983 ஜூலைக்குப் பின்னர் நியமிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள்

2 ஆசிரியர் பயிற்சியின் பின் 1986 டிசம்பரில் இரண்டுவருட சேவையை பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள்

3 சுகயீனமும் ஆசிரியர் பயிற்சி அல்லது, பல்கலைக்கழக பயிற்சி நெறி பயிலும் ஆசிரியர்கள்.

(உ-5)

தொழிற் சங்கவாதி ஜெயத்திற்கு புகழாரம்

வல்வெட்டித்துறை, ஆக. 14
அன்று ஒடுக்கப்பட்ட சமூகத்தினருக்காகப் போராடியவர் அமரர் செ. தர்மகுலசிங்கம் (ஜெயம்)

இப்படி டாக்டர் எஸ். மாகிலாமணி கூறினார். தர்மகுலசிங்கம் நினைவு நூலக்கூட்டத்திற்கு தலைமைதாங்கிப் பேசுகையிலே அவர் இப்படிச் சொன்னார்.

திரு. சிதம்பரப்பிள்ளை பேசுகையில் வடமாகாணம் முழுவதும் தொழிற் சங்க அமைப்பு முறைகளை ஆரம்பித்து வைத்த பெருமை தர்மகுலசிங்கத்துக்கே உரியது என்று சொன்னார்.

திருவாளர்கள்: பொன் குமாரசாமி, எம் மகாலிங்கம், நெல்லை க. பேரன், கே. தங்கவடிவேல் ஆகியோரும் பேசினர் (உ-எ)

துப்பாக்கி இளைஞரால் 35 பவுண் நகைகள் பணம் கொள்ளை

கல்லாரையில் சம்பவம்

உடுவில், ஆக 14
மல்லாகம் கல்லாரையில் துப்பாக்கிஞருடன்சென்ற இளைஞர் கோஷ்டி நள்ளிரவில் 35 பவுண்நகைகளையும் 12 ஆயிரம்ரூபா பணத்தையும் சில மின்சார உபகரணங்களையும் கொள்ளையடித்தது.

சுன்னாகம் ஐயனார் கோவிலுக்கு அருகாமையிலுள்ள கல்லாரையில் வசிக்கும் முன்னாள் அரச அதிகாரியான த சண்முநாதன் (51 வயது) என்பவரது வீட்டிலேயே இக்கொள்ளை நடந்தேறியுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களே இக்கொள்ளையை நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளையில் கடுப்பட்டோர் கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களும் வைத்திருந்தனர் என்றும் குடும்ப அங்கத்தவர்களின் கழுத்தருகே தப்பாக்கியையும் கத்தி போன்ற ஆயுதங்களையும் நீட்டிப் பலமுறுத்தியே அலுமாரித் திறப்பைப் பெற்றனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-27)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

அலுவலகம் திங்கள் முதல் பளையில்

கிளிநொச்சி ஆக 14
வவுனியாவும், முல்லைத்தீவு, கிளிநொச்சி யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நீர்ப்பாசன வேலைகளைக் கவனித்து வந்த கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் அலுவலகம் கடந்த 11ஆம் திகதி திங்கட்கிழமை முதல் பளையில் இயங்க ஆரம்பித்துள்ளது

கிளிநொச்சியிலிருந்து வந்த இந்த அலுவலகத்தின் ஒரு பகுதி மாங்குளம் முகாமாக மாற்றப்பட்டதும் அதனைத்தொடர்ந்து கடந்த ஜூன்மாதம் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் அது முற்றாக ஸ்தம்பிதநிலை அடைந்ததும் குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டு விதை உருளைக்கிழங்கா?

யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகள் அதிருப்தி

பகாவி, ஆக 14
யாழ் மாவட்டத்தில் பெரும்போகச் செய்கைக்கு இந்த வருடமும் உள்நாட்டு விதை உருளைக்கிழங்கே வழங்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டிருப்பது குறித்து யாழ் மாவட்ட விவசாயிகள் பெரிதும் அதிருப்தி தெரிவித்திருக்கிறார்கள்.

உள்நாட்டு விதை கிழங்கில் புதிய நோய்கள் தோற்றிக் கொள்வதாலும் —

எதிர்பார்த்த விளைவு கிடைக்காமையாலும் யாழ் குடாநாட்டு விவசாயிகள் பலர் இவ்வருடம் உருளைக்கிழங்குச் செய்கையினை மேற்கொள்வதில்லை எனத் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

நுவரெலியா விவசாயிகளுக்கு வப்பழங்கலடுவது போல தமக்கும் வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட விதை உருளைக் கிழங்கு வகைகளை பெற்றுத்தர அரசாங்க அதிபர் ஏற்பாடு செய்ய வேண்டுமென பல விவசாய அமைப்புகள் கோரிக்கை விடுத்திருக்கின்றன.

கடந்த மூன்று வருட காலமாக உள்நாட்டு விதை கிழங்கினைப் பாவித்ததனால் பெரும் இழப்படைந்த விவசாயிகள் இனியும் இந்த 'விஷப்பரீட்சை'யில் ஈடுபடமுடியாதுள்ளதெனக் கவலை தெரிவித்துள்ளனர். (உ-119)

வயாவிளான் 4 மாதங்களாக இருளில்

யாழ்ப்பாணம், ஆக.14
வயாவிளான் பகுதி கடந்த நான்கு மாதங்களாக இருளில் மூழ்கிக் கிடக்கிறது.

மின்சார விநியோகம் இல்லாததால் இப்பகுதியில் உள்ள கமுகு, தென்னங்கன்றுகளுக்கு நீர்ப்பாய்ச்ச முடியாமல் அவை கருகிவருகின்றன.

இவ்வாறு யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை செயலாளர் எஸ். பரமநாதனிடம் வயாவிளான் பகுதி மக்கள் முறையிட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை அபிவிருத்திச் சபை செயலாளர் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பின் போது அவர்கள் இந்த முறைப்பாட்டைத் தெரிவித்தனர். மயிலிட்டி அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் என். ஞானவேல் தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் செல்வி சோமசுந்தரம் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அப்பகுதிக்கான 'ட்ரான்ஸ்போமர்' இராணுவ முகாமுக்கு அண்மையில் இருப்பதால் மின்சார ஊழியர்கள் திருத்த வேலைகளை அங்கு செய்ய முடியாத நிலை நிலவுகிறது;

இதேவேளை வயாவிளான் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களில் பலர் மின்சார விநியோகம் இல்லாத காரணத்தாலேயே திரும்பவும் சொந்த வீடுகளுக்கு திரும்புவதற்குத் தயங்குகிறார்கள் (உ-5)

கருத்தரங்கு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆக. 14
வடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவினரால் புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் வளர்த்தோர் போஷாக்குணவு பயிற்சி நெறிக் கருத்தரங்கு நேற்று கிழமை ஆரம்பமானது.

இருவாரங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ள இக்கருத்தரங்கு திட்டம் அமுலாக்கல் அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கருத்தரங்கிற்கான வேலைத்திட்டங்களை திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி. சரோஜினி கணேந்திரன் மேற்கொண்டிருந்தார்.

50பேர் கலந்து கொள்ளும் இப்பயிற்சி நெறிக் கருத்தரங்கில் 14 விரிவுரையாளர்கள் விரிவுரைகள் நடத்துவர்.

புலோலி ரோ க.த.க. பாடசாலையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இக் கருத்தரங்கின் இறுதியில் [illegible] ஏற்பாடு செய்யப்பட்டு [illegible] நிகழ்கிறது. (உ-10)

31 ஆம் திகதிக்கு முன்னர் உணவு முத்திரை

யாழ்ப்பாணம், ஆக. 14
யாழ் மாவட்ட மக்களுக்கான உணவு முத்திரைகளை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் வழங்குவதற்கு [illegible] ஏற்பாடு [illegible] நிகழ்கிறது. (உ-10)

கிராமம் தோறும் ஐக்கிய நாணய சங்கம்

கருத்தரங்கில் வலியுறுத்து

சுன்னாகம். ஆக 14
தேசிய வீடமைப்புக் கடன்களை அடுத்த ஆண்டு முதல் பதிவு செய்யப்பட்ட ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கூடாகவே வழங்கப்படவுள்ளன எமது மக்களும் அக்கடனைப்பெற்று வசதியாக வாழ வழிசெய்ய விரும்பும் அனைத்து மக்களும் கிராமம் தோறும் ஐக்கிய நாணய சங்கங்களை நிறுவும் முயற்சிக்கு ஊக்கமளித்து இன்றையசூழ்நிலையில் மிகவும் அத்தியாவசியமானதாகும்

கடனில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் இப்படிக் கூறினார்.

'தேசிய வீடமைப்புக் கடன் வசதிகளும் ஐக்கிய நாணய சங்கங்களின் பங்கும்' பற்றிய கருத்தரங்கு சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் அப்படிச் சொன்னார்

உதவிக் கூட்டுறவு ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கம் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் சுன்னாகம் ப. நோ. கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. சி. குமாரவேல் பேசுகையில் 'கூட்டுறவு சங்க அமைப்பு எவ்விதம் மக்களுக்கு நாளாந்தச் சீவிதத்துக்கு உதவுகிறதோ அதேபோல மக்களின் முக்கிய தேவைகளில் ஒன்றான வீட்டை அமைப்பதற்கும் ஐக்கிய நாணயச் சங்கங்கள் உதவும் என்றார்.

புன்னாலைக்கட்டுவன் கிராம சேவைப் பிரிவில் புன்னாலைக்கட்டுவன் வடக்கு, தெற்கு ஈவினைக் கிராமங்களில் 3 சங்கங்களும்—

குப்பிளாவில் இரண்டு சங்கங்களும் சுன்னாகம் கிராம சேவைப் பிரிவில் கோட்டைக்காடு, குரா வத்தை, கல்லாரை, சுன்னாகம் தெற்கு ஆகிய இடங்களில் 4 ஐக்கிய நாணய சங்கங்களும்—

கந்தரோடையில் ஒன்றும், உடுவில் மகளிர்-சுதுமலை வேலி புதுமடம் ஆகிய உடுவில் கிராம சேவைப் பிரிவில் நான்கும்.

தாவடியில் இரண்டு சங்கங்களும் ஏழாலையில் இரண்டு சங்கங்களும் நிறுவுதல் அவசியம் எனக் கருத்தரங்கின் இறுதியில் முடிவு செய்யப்பட்டது. (உ-27)

தேவை

அரியாலை மகளிர் சங்கத்தில் பப்படச் செய்கையை ஆரம்பிப்பதற்கு இத்துறையில் அனுபவமும் ஆற்றலும் கொண்ட இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் தமது விண்ணப்பத்துடன் அரியாலை மாம்பழச் சந்திக்கருகாமையில் இருக்கும் இறைஞ்சுகுளம் வீதியில் உள்ள மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் 16-8-86ந் திகதி பி ப. 2 00 மணிக்கும் 4 00 மணிக்குமிடையில் சமுகம் கொடுக்கவும். அத்திகதியே தேர்வு நடைபெறும் ஏனைய விபரங்கள் நேரில் பெற்றுக் கொள்ளலாம் தலைவி, அரியாலை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம்.

பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன்

யாழ். பீச் இன்ஸ்

ஆதரவில்

ஜோ. எகட்டன்

வழங்குகின்றார்

இடம், பொருள், ஏவல்

அறிய

17 - 08 - 1986

(உதயனைப் பாருங்கள்!)

செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்,
யாழ். நகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

ஒருவன் பிறரிடத்துக் குறிறம் காணப் புகுவானேயாகில், அவனது மனமே முதலில் மாசடைகின்றது.

— அன்னை சாரதாதேவி

உதயன்

நடுநிலைமை — விருப்பாமை — தரு நிலைமை

இல, 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம். 14-08-86 த.பெ.23

'ராகிங்' வேண்டாம்

"ராகிங்" என்பது ஆங்கிலச் சொல். அதனைத்தமிழில் கிண்டல் கலாட்டா என்று சொல்லலாம்.

பல காலமாக பல்கலைக்கழகங்களில் பல பிரச்சினைகளைத் தோற்றுவித்து வரும் விவகாரம் இந்தக் கிண்டல் கலாட்டா.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் அதற்கு விதிவிலக்கல்ல இதற்கு முந்திய வருடங்களைப் போல் இம்முறையும் 'ராகிங்' விவகாரம் அங்கு சூடு பிடித்திருக்கிறது பிரச்சினைக்குரிய விடயமாகி விட்டது.

அதன் விளைவாக கடந்த சில நாட்களாக மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வருகிறார்கள் பல்கலைக்கழக ஊழியர்களும் கடமைக்குச் செல்லாது மறியல் இயக்கம் மூலம் தடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நிலைமை பெரும் கவலை தருவதாகும்.

பல்கலைக்கழகக் கல்வி ஆண்டின் தொடக்கத்தில் 'ராகிங்' கலாட்டா மாணவர் கல்வியில் கலாட்டா புரிவது வழக்கமாகி விட்டது. இது ஒரு 'சீஸன்' நோயாகவும் மாறிவிட்டது.

'ராகிங்' மேலைநாட்டு வழக்கம். பழைய காலத்தில் பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறுவது என்பது ஒரு கிடைத்தற்கரிய அதிர்ஷ்டமாகக் கருதப்பட்டதுண்டு. அதனால் பல்கலைக்கழக அனுமதி பெற்று முதலில் அங்கு செல்வோருக்குத் 'தலைக்கனம்' ஏற்படாதிருப்பதற்காக அவர்களை கிண்டல் கலாட்டாவுக்கு ஆட்படுத்தும் பழக்கம் மேலைநாடுகளில் இருந்தது.

அந்தப் பழக்கம் எமது நாட்டு பண்பாட்டுக்கும், பழக்க வழக்கத்துக்கும் சற்றேனும் ஒவ்வாதது. எனினும் இலங்கைப் பல்கலைக்கழகம் ஆரம்பித்த காலத்திலிருந்தே 'ராகிங்' இந்த நாட்டிலும் காலூன்றியது.

மிக அண்மைக் காலமாக 'ராகிங்' கொடிய வடிவம் எடுத்தது. புதிய மாணவர்களுக்கு உடல், உளப் பாதிப்புகளை ஏற்படுத்தும் அளவுக்கு அது கொடூர நிகழ்ச்சியாக மாறியது. எத்தனை வாதப் பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டாலும், என்னென்ன சாதகமான விளக்கங்கள் தெரிவிக்கப்பட்டாலும் "ராகிங்" என்ற வேண்டாத கிண்டல் கலாட்டா ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. அது எந்த ரூபத்தில் இருந்தாலும் முற்றுகத் தடை செய்யப்பட வேண்டும். அதனை மீறும் மாணவராயினும் சரி, வேறு எவராயினும் சரி கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்.

யாரோ வெளிநாட்டாரின் "கூத்தை" இரவல் வாங்கி எமது பிள்ளைகளின் கல்வியையும், மனத்தையும், பண்பையும், மானத்தையும் கெடுக்க எவருக்கும் அனுமதி தரப்படலாகாது.

பல்கலைக்கழகத்துக்குப் புதிதாகச் சேரும் மாணவர்களை ஒன்று கூடல் நிகழ்ச்சி ஒன்றுக்கு அழைத்து, பல்கலைக்கழகக் கல்வியின் தரம் தமியம், உயர் கல்வியின் சிறப்பு, அதனைக் அக்கறையுடன் பயில வேண்டியதன் தேவை, சக மாணவர்களோடு அன்னியோன்யமாகப் பழகுவதன் அவசியம் ஆகியவற்றை அங்கு எடுத்துரைக்கலாம் அந்த நிகழ்ச்சியில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் கலந்து கொண்டு புத்திமதி கூறலாம்.

அதற்கு அப்பாற்பட்டு 'ராகிங்' சேஷ்டை எதுவும் இருக்கக் கூடாது. அதில் ஈடுபடுவோரை பல்கலைக்கழகத்திலிருந்து 'சீட்டுக் கிழித்து' அனுப்ப நிர்வாக ரீதியாக, சட்டரீதியாக வகை செய்யப்பட்டு ஆகவேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இப்போது நடைபெற்றுவரும் 'ராகிங்' பிரச்சினையின் காரண காரியங்களை அலசி ஆராய்வது எமது நோக்கமல்ல அங்கு சகஜநிலையைக் கொண்டு வருவது நிர்வாகத்தினரதும் மாணவர்களினதும் மிகப்பெரும் பொறுப்பு. வடக்கிற்கென உள்ள ஒரேயொரு உயர்கல்வி நிலையத்தின் கீர்த்தி கெட்டுவிடாமல் பார்த்துக் கொள்வது அவசியம்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பல்கலைக்கழகங்களில் 'ராகிங்' முழுதாகத்தடை செய்யப்பட வேண்டும். அதனை மீறுவோர் ஆட்சேர்வாக்கு, பரிசுபடிவிந்றித் தண்டிக்கப்பட வேண்டும். எமது நிலை இதுவே.

பேர்லின் சுவர் ஒரு அவமதிப்பு என்கிறார் றேகன்

வாஷிங்டன், ஆக. 14

கம்யூனிஸ்டுகளால் கட்டப்பட்ட பேர்லின் சுவர் மனித உணர்வுகளுக்கு அவமதிப்பாக விளங்குகின்றது.

இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி றேகன் பேட்டியொன்றில் கருத்து வெளியிட்டார்.

கிழக்கு பேர்லினையும் மேற்கு பேர்லினையும் பிரிக்கும் செயற்கைத் தடையாக விளங்கும் இச்சுவர் அமைக்கப்பட்டு 25 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இதுதொடர்பாகவே ஜனாதிபதி றேகன் பேட்டியளித்தார்.

தொடர்ந்தும் பேர்லின் சுவர் இருந்து வருவது ஜனநாயக வாழ்க்கைக்கு முட்டுக்கட்டையாகவும், மக்களை அடிமைகள் போல நடத்துவதாகவும் தோன்றுகின்றது.

எனவே அச்சுவரை அழித்து நிர்மூலமாக்கி விடும்படி கம்யூனிஸ்ட்களை வலியுறுத்துவேன். ஜேர்மனி சமாதானமாக மீண்டும் இணைவதை அமெரிக்கா ஊக்குவிக்கும்.

இவ்வாறு றேகன் தெரிவித்தார். (ஒ)

மின்கம்ப தண்டனை

மட்டக்களப்பு, ஆக. 14

மட்டக்களப்பு, கிராமிக் நேற்று முன்தினம் தமிழ் இளைஞன் ஒருவனுக்கு மின்கம்ப மரண தண்டனை வழங்கப்பட்டது. (இ-எ-21)

தமிழக மேலவை கலைப்பு சட்டமூலம் நிறைவேறியது

தி.மு.கஉறுப்பினர்கள் வெளிநடப்பு

புதுடில்லி, ஆக.13

தமிழ் நாடு மேலவையைக் கலைக்க வகை செய்யும் சட்டமூலம் இந்திய நாடாளுமன்றமான லோக்சபையில் நிறைவேறியது இந்த சட்டமூலம்மீது விவாதம் நடைபெற வேண்டும் என்று கோரி தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்

ஆந்திரா, மேற்கு வங்காள மாநில மேலவைகள் கலைப்பு சட்ட மூலங்கள் விவாதமின்றி நிறைவேற்றப்பட்டதை நடாளுமன்றத்திற் சுட்டி காட்டிய அண்ணா தி.மு.க. தமிழ்நாடு மேலவை கலைப்பு சட்ட மூலத்துக்கும் விவாதம் தேவையில்லை என்று தெரிவித்தது.

பெரும்பான்மை வாக்குகளால் தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை வெளிட்டி அதற்கு மதிப்பளிக்கும் வகையில் இந்தச் சட்ட மூலம் லோக்சபையில் கொண்டு வரப்பட்டது. (இ-ஒ)

இலங்கைத் தமிழர் பிரச்சினை விவாதம் ஒத்திவைப்பு

புதுடில்லி ஆக 13

இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி சென்ற திங்கட்கிழமை இந்திய நாடாளுமன்றத்தில் நடைபெறுமலிருந்த விவாதம் ஒத்திவைக்கப்பட்டது.

இலங்கை அரசுக்கும் தமிழர் ஜக்கிய விடுதலைக் கூட்டணிக்கு மிடையில் பேச்சுவார்த்தைகள் மீண்டும் நடைபெறவிருப்பதாலே விவாதம் ஒத்திவைக்கப்பட்டது.

இவ்விவாதம் ஆரம்பமாகவிருந்தசமயம் வெளியுறவு இணை அமைச்சர் கே. ஆர் நாராயணன் றுக்கிட்டு மிக நெருக்கடியான இக்கட்டத்தில் இப்பிரச்சினையை விவாதிக்காமல் பின்னர் விவாதிக்கலாம் என யோசனை தெரிவித்தார்.

இந்த விவாதத்தைத் தாக்கல் செய்த அண்ணா தி.மு.க உறுப்பினர் குழந்தைவேலு இந்த யோசனையை ஏற்றதன் பின் விவாதம் நடப்புக் கூட்டத்தொடரின் இறுதி நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டது. (இ-ஒ)

கிறிஸ்தவர் சங்கம்

பெயனின் அதிகாரிதுவரும் அரசியல் கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்த கிறிஸ்தவர்கள் அமைதி விரும்புந் சங்கம் ஒன்றை உருவாக்கியுள்ளார்கள்.

இயக்கம் உரிமை கோருகிறது

வாஷிங்டன், ஆக.13

இந்திய ராணுவத்தளபதி லவதியாவின் கொலைக்கு உரிமை கோரப்பட்டுள்ளது.

காலிஸ்தான் அதிரடிப் படை என்றழைக்கிய தீவிரவாத இயக்கம் அக் கொலையை தாமே நடத்தியதாக உரிமை கோரியுள்ளது.

பொற்கோயில் முற்றுகையுடன் தொடர்புடைய மேலும் பல ஜெனரல்களை குடுத்தடுத்து கொலை செய்யப் போவதாகவும் சதுஎச்சரிக்கை செய்துள்ளது

வெளி உலகில்

ஒலிவர்தம்போவை சந்திக்க விருப்பம்

அயிரிக்க தேசிய காங்கிரசை இதுவரை நிரா கரித்து வந்த அமெரிக்க அரசு, அதனை அதிகரிக்கவும் அதன் தலைவர் ஒலிவர் தம்போவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தவும் விருப்பம் கொண்டுள்ளதாகவும் அமெரிக்காஜநிக அமைச்சர் ஜோர்ச்சுல்ட்ஸ் தெரிவித்தார்.

மார்க்கோஸ் விடு ஏலம் போனது

முன்னாள் பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி மார்க்கோஸினது அமெரிக்காவிலிருந்த வீடும் பல ஆடம்பரப் பொருள்களும் ஏலத்தில் விற்பனைசெய்யப்பட்டன.

சவூதி எச்சரித்தது

சவூதி அரேபியாவின் பாதுகாப்பையும் கதிரத்தையும் பாதிக்கும் எந்த விதமான ஈரானிய அச்சுறுத்தல்களுக்கும் தாம் பதிலடி கொடுக்கத் தயாராக இருப்பதாக சவூதி அரேபிய மன்னர் தெரிவித்தார்.

ஷிரோன்-முபாரக் சந்திப்பு

இஸ்ரவேல் பிரதமர் ஷிரோன் பெரனும் எகிப்திய ஜனாதிபதி முபாரக்கும் செங்கோவிலே பேச்சுவார்த்தைகளை நடத்தினர். இதனால் புதிய சமாப்தம் ஒன்று உதயாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

பிரெஞ்சுப்படை தாக்கப்பட்டது

தென் லெபனானில் நிலைகொண்டிருக்கும் ஐ.நா. பாதுகாப்புப் படையின் ஒரு பிரிவாகச் செயல்படும் பிரெஞ்சுப் பிரிவின் மீது ஷியா முஸ்லிம்கள் கொரில்லாத் தாக்குதல் மேற்கொண்டு பலத்த சேதமேற்படுத்தினர்.

தமிழக அரசு எதிர்ப்பு

தனுஷ்கோடி படகுத் துறை பயன்படுத்தப் படவில்லை என்ற காரணத்தால் அதனைக் கைவிட்டு விடும் மத்திய அரசின் யோசனைக்கு தமிழக அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

கங்கைக்கு 24 பேர் பலி

பிகார் மாநிலத்தில் கங்கை ஆற்றில் திங்கட் கிழமை நேர்ந்த படகு விபத்தில் மூழ்கி போனவர்களில் 24 சடலங்கள் மீட்கப்பட்டன.

உறவுகள் வலுவடையும்

ஈரானிய - ரஷ்யா நல்லுறவுக் மேலும் விரிவடையும் என்று ரஷ்ய உயர் அதிகாரிகளுடன் கடந்த ஒருவார காலமாக பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் ஈரான் திரும்பிய சர்வதேச தொடர்புகள் துணை அமைச்சர் மொஹம்மட் ஜராட் தெரிவித்தார்.

வித்தாரம்

ஹலோ முரளி! எப்படிச் சுகம்? என்ன சங்கதி, தலையில் கையை வைத்துக் கொண்டு வாருங்ய? ஏதாவது அபசகுனமாய்...?

அட நீயும் ஒரு அவசரபத்திரிகாதிபதி! இருக்கிறாய் இளப்பிரச்சினை தீரக் கூடிய மாதிரி இல்லை என்று சி.வி. இராமன் சொன்னதை வைச்சுக் கொண்டு மயிரைப் பிய்க்கிறாய்.

அவர் சொல்லவேணுமே, நிலைமையைப் பாக்கத் தெரியவில்லையே.

அரசாங்கம் மாவான சபையோடை அட்டை போல ஒட்டிக் கொண்டிருக்கு. கூட்டணி தமிழர் தரப்பும் இன்னாத தீர்வு சகியாது என்று சொல்லிப் போட்டுது மாவான சபையைக் குடுக்கிறதுமே அம்மாதலைமையில் 27 இயக்கங்கள் ஒன்று சேர்ந்திட்டினம் "தரப்பாக காக்கும் தலைவி" வாக அம்மாவுக்கு முடிசூட்டியாச்சு ஜனாதிபதிப் பதவி என்ட முடிக்குப் பதிலாக அவுக்கு இப்படி ஒரு புதிய முடி அணிவிச்சாக்க. அது இனிச் 'சன்னதம்' ஆடத் தயாருவா!

மாவான சபையில் அப்பா எம். டபிள்யூ. ஆர். டி. என்டு ஜே. ஆர். சொல்லித் திரியிறார். ஆனால் அம்மாவும், பிள்ளையும் அதை ஒத்துக் கொள்ளுமாப் போலை இல்லை

விஜே விட்டுக்கும், சொல்லிக் விட்டுக்கும் வெடிக்காத குண்டுகள் வியாச்சு இன்னும் ஆர் ஆர் விட்டுக்கோ ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்

மாவான சபைக்குப் பதிலாய் சுதந்திரக் கட்சி புதிய பிட்டம் ஒன்டை, மற்று திட்டம் ஒன்டை முன்னடைக்கப் போவதாக ஒரு கதை வந்திச்சு 12 பிராந்திய சபையின் அமைப்பதற்கு அந்த மாற்றத்திட்டம் வழி கூறும் என்டும் பேசப்பட்டுது பிறகு ஒன்டையும் காணேல். தரப்பாக்காக்கும் தலைவி பதவியோடை ஆம்மா ஆதை மறந்து விடுவா.

இப்பிடி நிலைமை இருக்கேக்கை சாத்திரிமார் சொல்லாவே பிரச்சினை தீராது என்டது தெரியுதெல்லே.

இதுக்குள்ளை இம் மாதம் 18 ஆம் திகதி ராகு—கேது மாற்றம் எண்டும் அதாலை பல கூடாத விளைவுகள் எண்டும் சாத்திரிமார் சொல்லத் தொடங்கி விட்டினம்

சாத்திரிமார் சொல்லுகிறதை எல்லாம் சொல்லாவிட்டால் என்ன. நடக்கிறது நடக்கத் தானே செய்யும்.

இராமன்னுமார் இரண்டொரு கிழமையிலை யாழ்ப்பாணத்தை ஒரு கை வாக்கிறதாக பெரிசா இப்ப ஒரு கிழவியா கதையள் நடக்குது. ஆனால் திங்கட்கிழமை நடந்த பாராளுமன்ற சபைக் கூட்டத்திலை அப்பிடி ஏதும் கதை வந்ததாகத் தெரியவில்லை என்டு கொழும்பு வட்டாரங்கள் சொல்லுதுகள். அதுக்குள்ளை இஞ்சை 'சாம்பு'க்கு போய் வந்தவவிட்டையும் தாங்கள் இன்னும் கொஞ்ச நாளைக்கு வெளிக்கிடுகிறதாக சொன்னதாத்தான் கேக்கிறன். வடக்குக்குப் புதிய இணைப்பதிகாரி நாளைக்கு வாறார் என்டும் செய்தி சொல்லுது.

ஆரையும் நம்பி கேலி விடேல். பொறுத்திருந்து பாக்க வேண்டியதுதான். ஆண்டவன் அவனவன் தலையிலை எழுதின மாதிரி நடக்கும்பா. தலையிலை கையை வைச்சுக் கொண்டு எடு!

இறைவனின்சிந்தனைஒன்றேஎம்மை மிருகநிலையிலிருந்து மனிதநிலைக்கு உயர்த்துகிறது

யாழ்ப்பாணம், ஆக 14

இறைவனுடைய சிந்தனை ஒன்றேஎம்மைமிருக நிலையில் இருந்து மனித நிலைக்கு உயர்த்துகின்றது.

ஆத்மஜோதி நா. முத்தையா 'சுந்தரர் சுகித்த இன்பம்' என்ற தலைப்பில் நல்லை ஆதீனத்தில் நேற்று முன்தினம் நிகழ்த்திய அருளுரையின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆத்மஜோதி முத்தையா மேலும் சொன்னதாவது;

சுந்தரர் சுகித்த இன்பத்தை அவருடைய வாக்காலேயே அறிவோம். 'இறைவனோடு இசைந்த இன்பம், இன்பத்தோடு இசைந்த வாழ்வு'' இப்படி இன்ப வாழ்வு என்பதற்கு இலக்கணம் கூறுகிறார் சுந்தரர்.

இறைவனோடு பொருந்திய இணக்கமே இன்பம். அந்த இன்பத்தோடு பொருந்திய வாழ்வே உண்மையான வாழ்வு—

சுந்தரரின் கூற்று. இறைவனை நினையாதோர் விருக நிலையில் வாழ்பவர்கள் என்றே கருத வேண்டும்.

எங்கே இறையருள் பொலியுமோ அங்கே சுந்தரரின் பெருகுக் கேற்ற அழகுண்மையும் பொலியும். இறைவனை அழகுடை ஆராதித்த சுந்தரர் "அழகே உனக் காளாயினிஅல்லேன் என்னாமே'' என்பாடுகிறார்.

அகக்கண் கொண்டு சுகிப்பதே ஆனந்தம் தரும் அனுபவம்.

இப்படி ஆத்மஜோதி முத்தையா தெரிவித்தார். (இ-எ)

சு. க. ஆதரவாளர் கைது

கொழும்பு, ஆக 14

கொஹுவெல சந்தியில் ஜனாதிபதிக்கு எதிராக சுலோகம் எழுப்பட்ட கவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த 3 சுதந்திரக்கட்சி ஆதரவாளர்களையும் பொலிஸார் கைது செய்தனர். (கூ-ஐ-எ)

கல்முனைக் கலவரம் பற்றி அமிர்

கொழும்பு ஆக 14

கல்முனைக் கலவரம் வேதனை அளிப்பதாக உள்ளது—

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் சொன்னார். (கூ.ஐ.எ)

ரயில்கள் தடம் புரண்டன

கொழும்பு, ஆக. 14

தொடர்ந்து பிரதான ரயில் பாதையில் செல்வாய் காலை எண்ணை ரயிலும் சரக்கு ரயிலும் மோதின.

இரண்டு ரயில்களும் இதனால் தடம் புரண்டன. எவரும் காயம் அடையவில்லை. (இ-ஐ-எ)

உள்ளூர் உற்பத்திக்கு மீண்டும் கிராக்கி

மேலும் ஊக்கமளித்தல் அவசியம்

வல்வெட்டித்துறை, ஆக. 14

வெளிநாட்டு இறக்குமதி காரணமாக பாதிக்கப்பட்ட உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கு நற்போதைய சூழ்நிலை காரணமாக மீண்டும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இப்படிச் சொன்னார் பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு க. நடராசா.

சாதனை செய்த மனிதர், சர்வதேச நல்லெண்ணம் ஆகிய விருதுகள் பெற்ற திரு. மு சி. சீனித்தம்பிக்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் திரு. நடராசா பேசினார்.

திரு. நடராசா மேலும் சொன்னதாவது;

எமது பனம் பொருள் உற்பத்தியான ஜாம் வகைகளுக்கு வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புக்கள் கிடைத்திருக்கின்றன.

பத்தாயிரம் போத்தல் ஜாம் அனுப்பவேண்டிய நாம் நடவடிக்கை எடுத்த போதும் எம்மால் ஐயாயிரம் போத்தல் ஜாமையே அனுப்பவைக்க கூடியதாக இருந்தது. பாதுகாப்பு உபகரணங்கள் கிடைக்காமையே இதற்குக் காரணமாகும்.

நிலக்கம் வடிசாலையில் தயாரிக்கப்பட்டு 1986 இல் விநியோகிக்கு விடப்பட்ட லோவைன் 67 எட்சம் ரூபாவை வருமானமாகப் பெற்றுத் தந்துள்ளது.

உள்ளூர் பாவனையாளர்கள் ஏனைய உற்பத்திகளுக்கு ஆதரவும் ஊக்கமும் அளித்தால், உற்பத்தி அதிகரிப்பதுடன் பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

—இப்படி பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. நடராசா சொன்னார். (உ-எ)

சமய நுதிகளில்

வரலட்சுமி விரத நோன்பு

உடுவில், ஆக. 14

இணுவில் வடிவேலி திருவருள்மிகு கண்ணகை பரமேஸ்வரி ஆலயத்தில் நாளை (15) ஆக திகதி வெள்ளிக்கிழமை வரலட்சுமி விரதநோன்பு சாஸ்திரோதமாக அனுஷ்டிக்கப்பட இருக்கிறது

நாளைக் காலை 9 மணி தொடக்கி வரலக்ஷ்மி குப்பஸ்நானம் பூஜைகள் நடைபெற்று தோன்பு காப்புரானும் அணிவிக்கப்படும். (இ)

சிந்தனைக்கு

குறள்:

சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை.

பொருள்:

சாவதைவிடத் துன்பமானது வேறொன்று இல்லை; ஆனால் வறியவர்க்கு ஒரு பொருள் கொடுக்க முடியாத நிலை வந்த போது அச் சாதலும் இனியதே ஆகும்.

நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

நல்லையின்வாழ்வே!

தந்தையை இழந்த தனயர்கள் ஓர்பால்
தாயரை இழந்த மழலைகள் ஓர்பால்
மைந்தனை இழந்த மகவிர்கள் ஓர்பால்
மாளிரை இழந்த மாதர்கள் ஓர்பால்
சிந்தனை இழந்த சிறுவர்கள் ஓர்பால்
சிறுவரை இழந்த தீனர்கள் ஓர்பால்
வந்தனை செய்தேநின் வாயிலில் நின்றார்
வாதனை தீர்த்தருள் நல்லையின் வாழ்வே

கந்தையு மிழந்து கதறினர் ஓர்பால்
கணவனை இழந்து கவிவளர் ஓர்பால்
புந்தியில் நொந்து புலம்பினர் ஓர்பால்
புகலிடம் இழந்து புகுந்தனர் ஓர்பால்
வெந்துயர் ரடைந்தோ வெதும்பினர் ஓர்பால்
வேதனை மிகுந்து விம்பினர் ஓர்பால்
செந்தினை நுகரும் சேவலி கொடியாய்
சேவரைக் காத்தருள் நல்லையின் வாழ்வே.

— கிங்கையாழியன் —

பொது ஸ்தாபனங்கள் சிறுவர் பராமரிப்பில்

முழு மூச்சாக ஈடுபட வேண்டும் விடுதலைப் புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக 14

அனாதரவு பொது ஸ்தாபனங்களும் சிறுவர் பராமரிப்பில் முழு மூச்சாக ஈடுபடவேண்டும் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"புலிமாமா'' என்ற பெயரில் "எம் உயிரினும் இனிய தமிழீழ மழலைகளுக்காக'' என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையின் சாரம் வருமாறு:—

ஒவ்வொரு நாட்டு போராட்ட கால கட்டத்திலும் கவனிப்பாக சிறுவர் மனநிலை மிகக் கடுமையாகப் பாதிப்படைகிறது. ஒர் நாட்டின் வருங்கால வரலாறுகளுக் கேற்பவும் பதிப்பு அந்நாட்டின் எதிர்காலத்தையே இருளடையச் செய்கிறது.

எதையும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாத வயதிலுள்ள கள்ளங் கபடமற்ற குழந்தைகளின் பராமரிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளோம் எம் நாட்டின் வருங்கால வரலாறுகளின் ஒழுக்கமானவை வளர்ச்சியிலேயே எம் எதிர்காலம் தங்கியுள்ளது.

இந்த வகையில் இப்போரின் கடுமையான தாக்கங்களில் இருந்து எம் மழலைகளின் மனநிலை பாதிப்படையாமல் பேணுவதன் ஓர் அங்கமாக சரணாலயம் செயற்படுகிறது.

இதே போன்று அனாதரவு பொது ஸ்தாபனங்களும் "சிறுவர் பராமரிப்பில்'' முழு மூச்சாக ஈடுபடுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wyman En lish Language
INSTITUTE
SPOKEN ENGLISH
WITH GRAMMAR
for G.C.E. O/L Dec. '86
ஆரம்பம்:
நாளாந்த வகுப்புகள்: 18-8-86 மாலை 4—5
வார இறுதி: 16-8-86 மாலை 3—5
S. B. Iyar 12, வைமன் விதி

உதயன்

14 08—1986 வியாழக்கிழமை

WYMAN ENGLISH LANGUAGE INSTITUTE
SPOKEN ENGLISH
WITH GRAMMAR
for G.C.E. O/L Dec. '86
ஆரம்பம்:
நாளாந்த வகுப்புகள்: 18-8-86 மாலை 4—5
வார இறுதி: 16-8-86 மாலை 3 - 5
S. B. Iyar 12 வைமன் விதி.

தம்பாட்டியில் பாதை இறங்குதுறை

அமைப்பதற்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஆக 14

தீவுப்பகுதிக்கான போக்குவரத்தை இலகுபடுத்தும் வகையில் சாத்திபுரம் — தம்பாட்டிப்பாதை இறங்குதுறை விரைவில் அமைக்கப்படும்.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றைத் தயாரித்து அதனைச் செயற்படுத்துவது என அரச அதிபர் திரு. வை. மு. பஞ்சலிங்கம் உறுதிபளித்தார்.

நேற்று அபிவிருத்திக் குழு தீவுக்குழு அரச அதிபரை நேற்றுச் சந்தித்து உரையாடிய போது இந்த உறுதி மொழி வழங்கப்பட்டது.

குழுத்தலைவர் திரு. எஸ். பாலச்சந்திரன் தலைமையில் சென்ற தூதுக்குழு தீவுப்பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து அரச அதிபருடன் பேசியது.

மேலதிக அரச அதிபர் திரு. இராமநாதன் பிரதிநிதிட்டமிடல் பணிப்பாளர் திரு. சிவதாசன், பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. குலசேகரம், தலைமைச் செயலக உதவி அரச அதிபர் திரு சோமாஸ்கந்தன், சமூக சேவை உதவிப் பணிப்பாளர் திருமதி சிவநிதம்பரம், உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு பத்மநாதன், சமூகசேவை பிரேஷ்ட ஆணையாளர் திரு. பரமலிங்கம் ஆகியோரும் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அரசாங்கத்துறைப் படகுச் சேவைகளை வசதியான முறையில் இறங்கு துறை ஒன்றை எதிர்வரும் மழைப் காலத்திற்கு முன்பதாக அமைப்பது பற்றிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

புங்குடுதீவுக்கான குடிநீர் விநியோகத்தை உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதி அளிக்கப்பட்டது. (உ)

ஞாயிறில் இனிமேல் பென்ஷன் இல்லை

யாழ்ப்பாணம், ஆக. 14

செப்டம்பர் மாதம் தொடக்கம் யாழ். செயலக இலங்கை வங்கி கிளையில் பென்ஷன் பெறுபவர்களுக்கு ஞாயிறுக் கிழமைகளில் பென்ஷன் வழங்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

செப்டம்பரில் இருந்து 15 ஆம் திகதிக்குப் பின்னர் முதல் சனிக்கிழமை மன்று சிவில், ஆளியர் பென்ஷன் வழங்கப்படும்.

அடுத்து வரும் திங்கள் கிழமை விநாயகர் சதுர்த்தி, செவ்வாய், புதன் கிழமைகளில் ஏனையோருக்கான பென்ஷனும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

ரயில்வே ஊழியருக்கு இராணுவப் பயிற்சியா?

நீதிமன்றம் இடைக்காலத்தடை

கொழும்பு, ஆக 14

35 ரயில்வே பாதுகாப்பு ஊழியர்களை இராணுவப்பயிற்சி பெறுமாறு ரயில்வே பொதுமுகாமையாளர் விடுத்த உத்தரவை நிறுத்திவைக்கும்படி உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடைஉத்தரவு வழங்கியது.

பன்னல இராணுவப் பயிற்சி முகாமில் பயிற்சி பெறும்படி ரயில்வே பொது முகாமையாளர் உத்தரவிட்டது அரசமைப்புச்சட்டத்தின் அடிப்படை உரிமை விதிகளை மீறுவதாகும் என்று தெரிவித்து 35 ரயில்வே பாதுகாப்பு ஊழியர்கள் உயர்நீதிமன்றத்தில் மனுஒன்றைச் சமர்ப்பித்திருந்தனர்.

மனுவிற்குச் சார்பாக சட்டஅதிகாரணி நிமால் சிக்வா வாதாடினார்.

மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர் நீதிமன்றம், விசாரணை முடிவடையும்வரை இராணுவப் பயிற்சி பெறக் கோரும் முனிப்புரையை நிறுத்து வைக்கும்படி ரயில்வே பொதுமுகாமையாளருக்கு உத்தரவிட்டது (உ-எ)

நாவற்குழியில் ஷெல் தாக்குதல்

கைதடி, ஆகஸ்ட் 14

செவ்வாய் கிழமை இரவு நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து ஷெல்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது:-

செவ்வாய் இரவு 11.00 மணி வளவில் நாவற்குழி இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியேற முற்பட்டனர் அப்போது விடுதலைப் புலிகள் 'ஆட்டோ மோட்டர்' தாக்குதலில் ஈடுபட்டனர்.

இராணுவத்தினரும் முகாமிலிருந்து ஷெல் தாக்குதல், துப்பாக்கித் தாக்குதலில் ஈடுபட்டனர்.

சுமார் ஒரு மணிநேரம் இந்த தாக்குதல் நடைபெற்றது. (இ-74)

தொலைத்தொடர்பு ஊழியர் வெளியேறினர்

யாழ்ப்பாணம், ஆக.14

யாழ் கோட்டையில் இருந்து நேற்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் காரணமாக யாழ் தொலைத் தொடர்பு ஊழியர்கள் வெளியேறிச் சென்றனர்.

நேற்றுக்காலை பத்து மணி வளவில் யாழ் கோட்டை முகாமில் இருந்து பலாலிப் பகுதியை நோக்கி திடீரென துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. (இ-10)

3 தமிழரின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோல் இருக்கவில்லை.

கல்முனை எ.ம்.பி ஜனாப் ஏ. ஆர். எம். மன்சூரின் தம்பிக்குச் சொந்தமானது இந்தப்பெற்றோல் நிலையம்.

கல்முனையில் உள்ள தமிழ் அதிகாரிகளுக்கு மட்டக்களப்பு— திருகோணமலை மாவட்ட ஆயர் சார்பில் 30,000 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் நேற்று [illegible] அரசாங்க நிவாரண உதவி [illegible] இன்னும் கிடைக்கவில்லை. (இ-எ-84)

போராட்ட காலத்தில் மற்றொரு போராட்டம்

மாணவர் அமைப்புக்குழு கூறுகிறது

யாழ்ப்பாணம் ஆக 14

எந்த உரிமைகள் எம் மக்களுக்கு அரசாங்கத்தால் மறுக்கப்பட்டனவோ அதற்காகப் போராடப் புறப்பட்டோமோ! அதே உரிமைகள் எமக்குள் மறுக்கப்படும் போராடும் நாம் நமக்குள் போராட வேண்டும்.

— இவ்வாறு யாழ்பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த சிலநாட்களாக நடைபெற்றுவரும் விரிவுரைகள் பகிஷ்கரிப்பு தொடர்பாக பத்திரிகை யாளருடன் நடத்திய சந்திப்பில் போதே மாணவர்கள் அமைப்புக்குழுவினர் இப்படித் தெரிவித்தனர்.

அச்சந்திப்பில் அவர்கள் மேலும் தெரிவித்தனாவது:—

பல்கலைக்கழக மாணவரின் இன்றைய போராட்டம் தமது ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரு போராட்டமே

எந்த ஒரு விடுதலை அமைப்புக்கும் சரியான போராட்டமல்ல.

நாம் எமது பல்கலைக்கழக நிர்வாகத்துடனே போராடுகின்றோம்

எமது போராட்ட நேரத்திலும், மாணவர்கள் வெளியாரால் தாக்கப்பட்டவேளையிலும் நிர்வாகம் மௌனமாக, பொறுப்பற்றதான மாக இருப்பதையிட்டு நாம் கவலைப்படுகின்றோம்.

ராக்கிங் பிரச்சினைகள் சம்பந்தமாக நிர்வாகம் பல தடவைகள் பல மாணவர்களைக் கண்டித்துள்ளனர்.

இந்நிலையில் நிர்வாகம் தவிர்ந்த வெவிசகதிகள் தன்னிச்சையாக தன்னை வழங்க முன்வந்தது தவறான காரியமாகும் இப்படியான தலையீடுகள் தொடர்வதை எம்மால் ஏற்க முடியாது. காரணமாகவே நாம் சில கோரிக்கைகளை முன் வைத்துப் போராடுகின்றோம்.

கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்படாவிடாவிடில் எமது அடையாள உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து போராட்டம் நடைபெறும். (உ-5)

தம்பலகமத்தில் நால்வர் பலி 15 வீடுகள் எரிப்பு

திருகோணமலை, ஆக 14

தம்பலகமம் கிராமத்தில் ஆயுதப்படையினர் நேற்று முன்தினம் நடாத்திய தேடுதலின் போது நான்கு பொதுமக்களை துப்பாக்கிச்சூடு நடாத்தி உயிரிழந்தனர் 15 வீடுகள் எரிக்கப்பட்டன.

புலுக்குடியிரு புப் பகுதியைச் சேர்ந்த மேற்படி நான்குபேரின் பெயர்களும் வருமாறு;

1. கோணமலை, வயது 65, 2. சீதைப்பிள்ளை (வயது 55) இவர் கோணமலையின் மனைவி 3 சேனாதிபிள்ளை, (வயது 50) 4. தர்மராசா, (30 வயது)

இறந்தவர்களின் சடலங்களை ஊரவர்களே அடக்கம் செய்தனர்.

சடலங்கள் குறித்து மரணவிசாரணை எதுவும் நடைபெறவில்லை. (இ-எ-150)

நீர் விநியோகம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மலைல கழிவுநீர் ஆவியாதலிலிருந்து [illegible] வரைக்கும் பாய்ச்சப்பட்டு ஆவிகிறக்கும் வேறொரு இயந்திரம் மூலம் கடலுக்குள் தள்ளப்படுகிறது.

கடந்த மூன்று மாதங்களுக்குமேலாக இப்பகுதிகளான மின்சாரம் துண்டிக்கப்பட்டதை அடுத்து கழிவு நீர் அகற்றும் வேலையும் நிறுத்தப்பட்டது

எனினும் நீர் விநியோகப் பகுதி ஊழியர்கள் யாழ். மாநகரசபை மின்சார ஊழியர்கள் ஆகியோரின் பெருமுயற்சியால் நேற்று முன்தினம் இந்த இயந்திரத்திற்கு மீண்டும் மின்சாரம் வழங்கப்பட்டது.

இதனை அடுத்து நேற்று பண்ணையில் உள்ள இந்த இயந்திரத்தை இயக்கச் சென்ற யாழ். ஆஸ்பத்திரி நீர் விநியோகப் குழு ஊழியர்கள் மீது கோட்டையிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது

எனினும் ஊழியர்கள் தெய்வாதீனமாக காயம் எதுவுமின்றி உயிர் தப்பினர்.

இயந்திர அறை இச் சம்பவத்தினால் சேதமடைந்தது. (இ-10)

அகதிகளாக..,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் நிலையில் உள்ள இலங்கை'' என்ற பட்டியலில் வந்த இலங்கைத் தமிழர் பற்றிய செய்திகளைக் கனடா நாட்டுப் பத்திரிகைகள் வெளியிட்டன.

மீட்கப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் இருந்து வந்தவர்கள் என்று ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

அவர்களில் ஒருவர் இருவர் மட்டுமே ஆங்கிலம் பேசக்கூடியவர்களாக இருப்பதால் சரியான தகவல்களைப் பெற முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இலங்கை [illegible] உள்ள தனது தூதுவரிடமிருந்து விபரமான தகவல்களைக் கேட்டுள்ளது. (அ-ஜ-எ)

அடையாளக் கார்ட் வடக்கில் மீண்டும் அவசியம்?

யாழ்ப்பாணம், ஆக .14

வடபகுதியில் முகாம்களுக்கு அருகே வசிக்கும் பொதுமக்கள், அரச ஊழியர்கள் எந்த நேரமும், தங்களின் அடையாளத்தை ஊர்ஜிதப்படுத்தக் கூடிய அடையாளக் கார்ட்டைகண்டிப்பாக வைத்திருக்க வேண்டும் என்று கேட்கப்பட இருப்பதாக அறியவருகிறது

பாதுகாப்பு அமைச்சு இதற்கான முடிவைச் செய்திருப்பதாக உதயனுக்கு மிக நம்பிக்கையாகத் தெரியவருகிறது.

வடபகுதி முகாம்களிலிருந்து படையினர் எந்த நேரமும் வெளியே வரலாம்.

அப்படியான சந்தர்ப்பத்தில் அவர்களின் தேடுதல் வேட்டைக்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்—

தமது அடையாளத்தை நிரூபிக்கும் அடையாளக் கார்டுகளை கண்டிப்பாகத் தம்வசம் வைத்திருக்க வேண்டும் —

அரச ஊழியர்களும், ஏனையோரும் தமது தொழிலை ஊர்ஜிதப்படுத்தக் கூடிய அடையாளக் கார்டுகளை எந்நேரமும் சமீப்பிக்கக் கூடியதான இருக்கவேண்டும்—

பாடசாலை மாணவர்களும் பாடசாலைக்குச் செல்லும் போதும் கூட தமது அடையாளக் கார்டுகளைத் தம்முடன் வைத்திருக்க வேண்டும் அல்லாது அரச கருமியே மேற்கண்ட முடிவைச் செய்திருப்பதாகச் சொல்லப்பட்டது. (அ-உ-6)

கொக்குவிலில் இரண்டு இடங்களில் ஒரேநாளில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஆக 14

செவ்வாய்க்கிழமை மாலை கொக்குவில் பகுதியில் இரண்டு வீடுகளில் ஆயுதம் தாங்கிய கொள்ளையர் தமது வல்லமையைக் காட்டினர்

கொக்குவில் கொலனி வடக்கு பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள ஒருவர் வீட்டில் நள்ளிரவில் 30 பவன் நகை ஆயுதமுனையில் கொள்ளையடிக்கப் பட்டது.

இந்தச் சம்பவத்தின் போது கொள்ளையர்கள் வீட்டிலிருந்த ஒருவரைத் துப்பாக்கி முனையில் உள்ள கத்தியினால் குத்திக் காயப்படுத்தினர்.

காயமடைந்த விசுவலிங்கம் தர்மகுலராசா (வயது 55) யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இதேவேளை செவ்வாய் இரவு கொக்குவில் கிழக்கில் உள்ள தனியார் போக்குவரத்துச் சேவை ஒன்றின் உரிமையாளர் வீட்டில் 15 ஆயிரம் ரூபா ரொக்கப்பணமும், 15 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும், 55 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க உடைமைகளும் கொள்ளையடிக்கப்பட்டன.

யம் வீட்டில் ஒருவரும் இருக்கவில்லை. கொள்ளையர்கள் வீட்டை உடைத்தே கொள்ளையை நடத்தியிருக்கின்றனர் (அ-6-10)

சம்பவம் நடந்த சமய 50 பேர் கைது

மட்டக்களப்பு, ஆக 14

மட்டக்களப்பு, புலிபாய்ந்தகல் பகுதியில் ஆயுதபடையினர் நேற்று சுமார் 50 பேர்களைக் கைதுசெய்தனர். (இ-எ-81)

புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 14

அக்கரைப்பற்று பொலீஸ் இராணுவ கூட்டு முகாமில் இருந்த செவ்வாய் இரவு 9 மணி வளவில் எமது மக்களை வேட்டையாடுவதற்கு நூறுக்கும் மேற்பட்ட கமாண்டோக்கள் நடைபவனியாகப் புறப்பட்டு முகாமுக்கு அண்மித்த பகுதியொன்றில் ரோந்து வந்துகொண்டிருந்த சமயம் நாம் அவர்கள் மீது திறனேட் வீசித் தாக்கியதில் அவர்களில் பலர் காயமடைந்தனர். நிலைகுலைந்த அவர்கள் பின் வாங்கினர்.

இத்தாக்குதலின்போது எமது தரப்பில் சேதமெதுவுமே இல்லை — இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

கருத்து வெளியிட மறுப்பு

கொழும்பு, ஆக. 14

இனப் பிரச்சினைக்குத் தீர்வைப்பற்றி உடன்பாட்டை அமுல்படுத்த ஒப்பந்தத்தில் இந்திய அரசும் கையெழுத்திட வேண்டும் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா தெரிவித்த கருத்துக் குறித்து, இந்தியத் தூதர் டிக்ஸிற் கருத்துத் தெரிவிக்க மறுத்து விட்டார்.

ஜனாதிபதியின் பேச்சின் சரியான வாசகம் கிடைக்காமல் கருத்துத் தெரிவிக்க முடியாது என்றும் திரு. டிக்ஸிற் சொன்னார். (அ-ஜ-எ)

மதகுரு விடுவிப்பு

கொழும்பு, ஆக. 14

நுவரெலியா பஸ்நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட நெடுந்தீவைச்சேர்ந்த கிறிஸ்தவ மதகுரு நிரபராதி என்றுகாணப்பட்டு விடுவிக்கப்பட்டார். (அ-ஜ-எ)

சிங்களவர் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிர்ப்பந்தத்துக்கு ஆளாகினர்

சென்றல் காம்ப் வர்காவல் படையினர் இத் தமிழர்களை அழைத்துச் சென்று அறவடை செய்ய வைத்த பின்னர் சம்பளமோ, சாப்பாடோ கொடுக்காமல் அடித்துத் துரத்தி விட்டனர் என்று மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் உறுப்பினர் திரு. ஆல்பேர்ட் சிவராஜினிடம் முறையிடப் பட்டுள்ளது. (இ-எ-84)

முஸ்லிம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டன் நெருங்கிய தொடர்புடையவர் என்று கருதப்படும் மூதூர் முன்னாள் எம் பி. திரு அ. தங்கத்துரையும் கூட்டணித் தலைவர்களுடன் இம்முறை வருவதாகக் கூறப்படுகின்றது.

கூட்டணித் தலைவர்கள் வெரும்பாலும் இன்று வியாழன் மாலை கொழும்பு வந்து சேருவர் என்று தெரிய வருகின்றது (அ-எ)

கோரிக்கை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு ஒழுமையான முறையில் நிர்வாகம் இயங்குதல் வேண்டும்.

எனவே பல்கலைக்கழக நிர்வாகம் ஒழுமையாக இறங்குவதைத் தடை செய்யாமல் மாணவர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்—

இப்படி பதில்தரணைவேந்தர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார் (உ-எ)

பத்தாவது ஆண்டு நினைவு தினம்

திருமதி இந்திரா தனராஜா
(தம்பிப்பிள்ளை)
(பதிப்பாசிரியை கலை வெளியீடுத் நினைகளம்)

தோற்றம் 28-07-1940 மறைவு 14-08-1976

"முத்துப்பல் பளிச்சிடவே
மோகனமாய்ச் சிரித்திட்டே
பத்தும் பலதுமறிந்து
பண்புடனே வாழ்ந்த நும்மை
நித்தம் நினைக்காத ஆளில்லை இங்கு எம்
சித்தம் கலங்கிடவே
சென்றதுதான் ஏதுக்கோ"

தாயாரும்
உடன் பிறப்புகளும்,
அவர்கள் குடும்பங்களும்

57/2, புங்கங்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலையவீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்லிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பட்டது. வெளியிட்ட திகதி 14 — 08 — 1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane, Power House Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Num rbaQJ 60 N 86

உதயம் தயாரிப்புகள்
தமிழ் மக்களின் சுகாதாரத்திற்கு
உத்தரவாதம் வழங்குகின்றன
ரங்கா
சீயக்காய் பவுடர்
இரசாயன சேர்க்கைகள் எதுவுமின்றி
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட சீயக்காய், வெந்தயம் சர்வதேச மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்படுவது
சீயக்காய் பவுடர்.
இயற்கை வளத்துக்கும், கேச வளர்ச்சிக்கும், தலை, கண் உறுப்புகளுக்கு ஆரோக்கியமும் வழங்குகிறது
ரங்கா சீயக்காய் பவுடர்
ஆயுள்வேத டாக்டர்களால் உத்தரவாதம் வழங்கப்பட்டது
ரங்கா சீயக்காய் பவுடர்
தமிழ் மண் எங்கும் விற்பனையாகிறது !
இது ஒரு சுதேச உற்பத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org